செ.வெ.எண்.587 நாள்.15.11.2017

**<u>தாம்பரம் நகராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்</u>**

**************

தாம்பரம் நகராட்சி முடிச்சூர் சாலை, சி.டி.ஓ.காலனி, பாப்பன் கால்வாய், ராமகிருஷ்ணாநகர், கருமாரியம்மன் நகர், பெரிய ஏரி, பெரியார் நகர், தாம்பரம் –மதுரவாயல் புறவழிச்சாலை பகுதிகளில் மழைநீர் வடிகால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட முடிச்சூர் சாலையில் சமீபத்திய மழை காரணமாக தேங்கியிருந்த தண்ணீர் வடிந்த நிலையில் மழைநீர் வடிகால்களை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அடுத்து மழை வந்தால் அதை எதிர்கொள்ளும் வகையில் தண்ணீர் துரிதமாக வடிவதற்கு வடிகால்கள் தூர்வாரப்படும் பணிகளை பார்வையிட்டார். நகராட்சியின் அனைத்து பகுதிகளிலுள்ள வடிகால்களில் அடைப்புகளை நீக்கி தண்ணீர் விரைந்து வடியக்கூடிய வகையில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தாம்பரம் பெரிய ஏரி, பீர்க்கன்கரணை ஏரி, பெருங்களத்தூர் ஏரிகளின் உபரிநீரினால் முடிச்சூர் சாலையில் மழைநீர் அதிக அளவில் தேங்வதற்கு நெடுஞ்சாலைத் துறை சார்பில் மாற்றாக மாற்று வழித்தடத்தில் பாப்பன் கால்வாய் வழியாக தண்ணீர் வடிவதற்கு சென்னை – மதுரவாயல் புறவழிச்சாலை வழியாக மழை வடிகால் அமைக்கப்பட்டு வரும் பணியை பார்வையிட்டார். சென்னை மதுரவாயல் புறவழிச்சாலையில் வடிகால்கள் தூர்வாரப்படும் பணியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்.

மேற்கு தாம்பரம் பெரிய ஏரியிலிருந்து உபரி நீர் செல்லும் கால்வாயில் அடைப்புகளை நீக்கும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு, ஏரியிலுள்ள ஆகாயத்தாமரைகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மண்டல நகராட்சி பொறியாளர் திரு.முருகேசன், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப்பொறியாளர் திரு.என்.ஆனந்தராஜ் மற்றும் நகராட்சி, நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்